# விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)

## எளையாம்பாளையம்

## தமிழ் உயராய்வுத்துறை

## சுதந்திர தின விழா பேச்சுப் போட்டி – ஆகஸ்ட் 2022




நமது கல்லூரியின் தமிழ்த்துறையில் 11.08.2022 **அன்று பகல்** 10.00 **மணிக்கு** சுதந்திர தின விழாவுக்கான **பேச்சுப் போட்டி** நடைபெற்றது. விடுதலைப் போரில் வீரத் தமிழர்கள், விடுதலைப் போரில் வீர மங்கைகள் ஆகிய தலைப்புகளில் மாணவிகள் பேசினர். இப்போட்டிக்கு நடுவர்களாக தமிழ்த்துறையின் உதவிப்பேராசிரியர்கள் **முனைவர் ம.விஜயகுமார்** மற்றும் **முனைவர் ரா.ரவிச்சந்திரன்** ஆகியோர் செயல்பட்டனர். இப்போட்டியில் நமது கல்லூரி மாணவிகள் 15 பேர் கலந்துகொண்டனர். அவர்கள் மிகச் சிறப்பான முறையிலும் அழகிய மொழிநடையிலும் நாட்டு உணர்வுடன் தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்தனர். நடுவர்களின் மதிப்பீட்டின்படி **முதல் பரிசினை முதுகலை இரண்டாம் ஆண்டு தமிழ் உயராய்வுத் துறை மாணவி செல்வி யு.நவமதி என்ற மாணவியும் இரண்டாவது பரிசினை இளம் அறிவியல் இரண்டாம் ஆண்டு உயிர் தொழில்நுட்பவியல் துறை மாணவி செல்வி ச.சௌமியா என்ற மாணவியும் மூன்றாவது பரிசினை இளம் அறிவியல் இரண்டாம் ஆண்டு கணினி அறிவியல் துறை மாணவி செல்வி ரா.ஜெயஸ்ரீ ஆகியோர் பெற்றனர்.** இந்த நிகழ்வு மாணவிகளின் பேச்சாற்றலை வளர்த்துக் கொள்ள உதவியாக இருந்தது.